வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்குஎண். CC 539/2020

வழக்குசாட்சி LW5/ PW3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அருள்ராஜ் | ஜாதி | |
| கணவர்/தந்தை | ஆறுமுகம் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 50 |

தேதி 06.01.2025

எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியபிரமாணம்செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் புழல் சைக்கிள் ஷாப் பகுதியில் குடியிருந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கையொப்பமானது அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் காவல் நிலையத்திற்கு எனது உறவினர் இறந்ததற்கு சென்றபோது கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் எதற்காக போலீசார் கையொப்பம் வாங்கினார்கள் என்று எனக்கு தெரியவில்லை. இவ்வழக்கினை பற்றி எதுவும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க சாட்சி பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அனுமதிஅளிக்கப்பட்டது.**

கடந்த 06.10.2019 காலை 9.15 மணியளவில் நானும் எனது நண்பர் ஜெயச்சந்திரன் காவாங்கரை பகுதியில் சென்றுகொண்டிருந்தபோது அங்கு பொதுமக்களும், போலீசாரும் கூட்டாமாக நின்றுகொண்டிருந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. அப்போது புழல் காவல் உதவி ஆய்வாளர் என்னை சம்பவ இடத்தினை பார்வையிட்டு பார்வை மகஜர், வரைபடம் தயார் செய்ததற்கு சாட்சியாக இருக்க கோரி நான் சம்மதித்து சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் இல்லை. மேற்படி பார்வை மகஜரில் கையொப்பத்தினை செய்துவிட்டு போலீஸ் விசாரணையின்போதும் மேற்படி தகவலை கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.